# இன்று உயிர்ப்பு ஞாயிறு.

*திருவழிப்பாட்டு ஆண்டு* C

*திருப்பலி முன்னுரை - 1*

இறைத்திருமகன் இயேசுக் கிறிஸ்துவில் அன்பு கொண்டுள்ள இறைமக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்தைக் கூறிக்கொள்வதில் பெரிதும் மகிழ்கிறேன். இன்று உயிர்ப்பு ஞாயிறு. அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

உயிர்ப்பு உன்னதமானது. ஆண்டவர் உயிர்த்தார் என்பதனால் தான் நம்முடைய விசுவாசம் உறுதிப் பெறுகின்றது. உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்ட மக்கள் நாம், அந்த நம்பிக்கை தருகின்ற வாழ்வினை சாட்சியாக்கி, நம் வாழ்வின் வழி, எல்லா ஆன்மாக்களையும் அவர் பாதத்தில் கொண்டு வந்து சேர்க்க, உறுதிபூண்டவர்களாய் பலியிலே பங்கேற்போம்.

**திருப்பலி முன்னுரை ~ 2**

இறைமகன் இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்பு நிறை சகோதர்களே! சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம். இன்று உயிர்ப்பு ஞாயிறு. அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக். அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று உயிர்ப்பு ஞாயிறு. பொய்மையும், அநீதியும் நம் வாழ்வின் இடையே தடைகளாகக் குறுக்கிட்டாலும் இறுதியில் அவை ஒன்றுமில்லாமல் வீழ்ந்து போகும் என்பது நம் ஆண்டவராம் இயேசுவின் உயிர்ப்பு சொல்கின்ற பாடம். பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் அவர் அடைந்த உயிர்ப்பின் வெற்றி உலகம் அனைத்திற்கும் இறுதியான வெற்றி, உறுதியான வெற்றி. புதிய பாஸ்காவின் புனித செம்மறியாம் இயேசுக் கிறிஸ்துவுடன் இணைந்து உயிர்ப்பின் ஒளியில் வாழ்ந்திட பெருமகிழ்ச்சியுடன் இத் திருப்பலில் பங்கு பெறுவோம்.

## திருப்பலி முன்னுரை ~ 3

இறைமகன் இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்பு நிறை சகோதர்களே! சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம். இன்று உயிர்ப்பு ஞாயிறு. அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

உயிர்ப்பு பெருவிழா புதிய வரலாறு. புரட்சி வரலாறு மரணத்தை வென்ற மாபெரும் மகிழ்ச்சி வரலாறு. இயேசு உடலோடு? உயிர்த்தெழுந்த வரலாறு. எனவே இன்று அக்களிப்போம். அகமகிழ்வோம். சீடர் கல்லறைவாயிலில் குனிந்து பார்த்தபொழுது, துணிகளை மட்டும் தான் காண முடிந்தது. ?குனிந்த பார்வை? என்பது முழுப்பார்வை அல்ல. மீண்டும் சீடர்கள் நேரிடையாக கல்லறைக்குள் நுழைந்து பார்த்தபொழுது இயேசு உண்மையிலேயே உயிர்ந்துவிட்டார் என்பதைக் கண்டு நம்பினர். மறைநூல் வாக்கை நினைவு கூர்ந்து புரிந்து கொண்டனர். மீண்டும் அவரோடு உண்டு, குடித்து, உறவாடி, அனுபவம் பெற்று அவனியெங்கும் சான்று பகிர்ந்தனர். பொய்மையிலந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், மரணத்திலிருந்து: உயிர்ப்புக்கும். கடந்து? செல்கின்ற வாழ்வே உயிர்ப்பு வாழ்வு. நிலை வாழ்வு. நம்பிக்கையோடு நாமும் புதிய பாஸ்காவைத் தொடர்வோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**உயிர் அளிப்பவரே இறைவா,**

உம் திருமகனின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு தோன்றி வளர்ந்த திருச்சபை உலக மக்கள் அனைவராலும் ஏற்கப்பட்டு, புனிதமான மக்களை உமக்காக உருவாக்க வரமருள வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**தந்தையே இறைவா!**

உடல் நலம் இன்றித் தவிப்பவர்கள், மனநலம் குன்றித் துன்புறுவோர் இவர்களுக்கு உயிர்த்த இயேசுவின் ஆற்றலாலும், மகிமையாலும் அனைத்து உதவிகளும் நல்மனம் கொண்டவர்கள் வழியாகக் கிடைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உம்மோடு திருமுழுக்கிலே ஒன்றித்து, அதனை இன்று புதுப்பித்த நாங்கள், பெற்ற அருளுக்கேற்ற வாழ்க்கை நடத்திடவும், கலகங்கள், பேர்கள், வன்முறைகள் ஓய்ந்து உறவிலும், உண்மை அன்பிலும் நாங்கள் எல்லாரும் உயிர்க்க அருள்தர உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**இரக்கத்தின் நிறைவே இறைவா,**

உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திடவும், பாவம், நோய், ஏழ்மை, வன்முறை, மதவெறி, தீவிரவாதம் போன்றவற்றால் வீழ்ந்து கிடக்கும் அனைவரும், மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த உம் திருமகனைப் போல,புது வாழ்வுக்கு உயிர்த்தெழ உதவிபுரிய வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்றும், உடலின் உயிர்ப்பினால் மாட்சிபெற்ற உம் திருமகனைப் போன்று, உள்ளத்தின் உயிர்ப்பினால் உமது மாட்சியில் பங்குபெறும் தகுதி அடையுமாறு எம் நாட்டினர் அனைவருடைய வாழ்வையும் புதுப்பிக்க வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.